

# எனக்குள் நெருப்பு

சக்தி குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் நெருப்பு

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

94 (0) 65 222 3297
94 (0) 65 222 4657 (Fax)
www.suriyawomen.org
suriyaw@slt.lk

ISBN: 978-955-8695-10-4

25
சூரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

ஒவ்வொருவர் வாழ்வும் பெறுமதியானது. எனினும் பெண்களின் வாழ்க்கைக் கதைகள், அதில் உள்ள படிப்பினைகள் எங்கும் பதியம் வைக்கப்படுவதில்லை. பெண்களாலும் கொண்டு செல்லப்படுவதில்லை. அவர்கள் வாழ்ந்த வாழ்வின் வடிவங்கள் கசங்கிய தாழில் வரையப்பட்ட கவிதை போன்று எங்கெங்கோ போடப்படும்.... அள்ளி எறியப்படும்.... காலப்போக்கில் எந்தக் கண்களாலும் தொடப்படாமல், உணரப்படாமல்.., இல்லாமலே போய்விடும்.

இன்றுவரை நாம் வாழ்வதற்காக பாடங்கள் தேடுகிறோம். எமது தாய் வாழ்ந்த கதை எமக்குத் தெரியாது. எமக்கருகில் இருந்த தாய், தாயின் தாய், அவள் நண்பி, அவள் சமூகம் வாழ்ந்த கதை அதற்குள் உள்ள பாடம், அதன் இயல்பு, எளிமை, போராட்டம், வெற்றி, அவள் வலிமை எம் காதிற்கும் வராமல் தொலைத்து விடப்பட்டதுபோல் இனியும் நடந்து விடக்கூடாது என்பதில் நாம் அக்கறையுடையவர்களாய் உள்ளோம்.

இங்கு நாம் சில பெண்களின் கதைகளைத் தருகிறோம். இவர்கள் ஒவ்வொருவரும் எமது சமூகத்துள் எம்முடன் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் உறவுகளின் மாதிரிகளே. இவர்கள் நீண்டகாலமாய் சூரியாவுடன் தொடர்பில் இருப்பவர்கள். "சக்தி குழு" என்னும் பெயரில் இன்றுவரை தமது உரிமைக்காக போராடிவரும் பெண்களுடன் ஒன்றித்திருப்பவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் செல்லும் கப்பல் போன்று பெண்களின் வாழ்க்கை அலைகளை எதிர்த்தெதிர்த்துப் பயணித்துக்கொண்டே உள்ளது. ஒரு அலை முடிய முடிந்ததலை எனும் நிலையில்லை. தொடரலைகளாய் நீளும் பெண்களின் சந்ததிகள். இவர்களுள் உருவாகும் வேகம் அதன் வலிமை காது கொண்டு கேட்கிறோம். உணர்கிறோம் எனினும் தரித்து நின்று தன்னைத்தான் ரசிக்க பெண்களுக்கான இடைவெளி எங்கே... நேரம் எங்கே... நாம் சிந்திக்கின்றோம். வரலாற்றுத் துளிகள் ஒரு துளியாய் இரு துளியாய் பாய்வதற்கான ஆரம்ப முயற்சியாக இக் கதைகள்.. சிலர் புனைபெயர்களில் தமது கதைகளை இங்கு கூறியுள்ளார்கள்.

இவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள். இது வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களின் கதைகள். இன்னும் இவர்கள் பாதைகளில் பல வெற்றிகளையும் சறுக்கல்களையும் சந்திப்பார்கள். எனினும் எழுவார்கள். என்றும் வாழ்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரஞ்சனி

"நான் அம்மாவோட இருக்கல்ல. 7 வயசுவரை அம்மம்மாவோடதான் இருந்தன். படிக்கிற மாமாவோட இருந்து. வீட்டில பிரச்சன தொடர்ந்து வருது. அம்மாவுக்கு அப்பா அடிக்கிற பிரச்சன. பிறகு 9ம்வகுப்பு படிக்கும்போது பெரியம்மாட்ட போயித்தன். அங்க இருந்துதான் பள்ளிக்குப் போனன்.

15 வயசில ஹொஸ்டலில சேர்ந்தன், அங்க இருந்து படிச்சது எனக்கு முதல் சந்தோசமாய் இருந்தது. பிறகு ஓயெல் (O/L) எடுத்தது அடுத்த சந்தோசம். ஆனா தம்பியும் தங்கச்சியும் படிக்கல்ல. தம்பி 10ம் ஆண்டுடன் படிப்ப விட்டுத்தான் அம்மாவப் பாக்கணும் என்று.

ஹொஸ்டலில இருக்கக்குள்ள சித்தப்பா மூலம் ஒரு சிங்கள நண்பரை சந்தித்தேன். பிறகு அவரையே சித்தப்பா மூலம் திருமணம் செய்தேன். ஹொஸ்டலில இருந்து வந்த பிறகு 21 வயதில் திருமணம் நடந்தது.

மூத்த மகன் பிறந்தான். நான் சந்தோசமா இருந்தன். மருமகள் என்றில்லாம மகள் மாதிரி கணவனின் அம்மா அன்பா பாசமா என்னப் பாத்தாங்க. பிறகு கணவனை இயக்கம் கொண்டுபோய் கொலை பண்ணித்து. அதோட என்ர அந்த வாழ்க்கை முடிஞ்சி போய்த்து.

இரண்டாவதாக கலியாணம் கட்டினன். அந்த வாழ்க்கையில மகள் பிறந்தாப் பிறகும் சந்தோசமா இருந்தன். வீடு வளவு எதுவும் எனக்கு இல்லாததால் கணவர் அவங்க அக்கா வீட்டதான் கூட்டிக்கொண்டுபோய் வச்சிருந்தார். அவங்க தொழிலுக்காக வடிசாரயம் காச்சி விக்கிறவங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தடுத்து பிள்ளைகள் பிறக்க சண்ட பிரச்சன தொடங்கித்து, அவங்களோடயும் பிரச்சினதான் குடும்பத்திலயும் பிரச்சினதான்.

பிறகு களுதாவளையில வளவு வாங்கினம். நிறுவனம் வீடு தந்தது. பிறகு ரெட்டப் பிள்ளைகள் பிறந்தது. கொஞ்சம் கொஞ்சமா பிரச்சன கூடிக்கொண்டே போனது.

குடிச்சித்து வந்து சரியா கஸ்டப்படுத்தினவர். என்ர கஸ்டத்தப் பாத்து அப்பா வந்து என்னோடயே இருந்திட்டார். நல்லா உழைச்சார். எனக்கு வருத்தம் என்றா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவார். இவர் அப்பாவோடயும் பிரச்சனப்பட்டுத்தார். பாவம் அப்பா என்னோட இருந்து கஸ்டப்பட்டார் என்னட்ட இருந்தேதான் செத்தார்.

கணவர் கையால ஒரே அடிவாங்குவன். அம்மம்மா சொன்னா "நீயா தேடின வாழ்க்க நீதான் அனுபவி" என்று.

பொலிசுக்கு கொடுத்தன். அவங்க அடிச்சி போட்டு கொஞ்ச நாள் அடச்சி வைச்சித்து விட்டுத்தாங்க. அப்ப கணவர் வந்து சொன்னார் "செத்தாலும் உங்களோட இருந்துதான் சாகுவன். வாழ்ந்தாலும் உங்களோட இருந்துதான் வாழுவன். இன்னொரு கலியாணம் கட்ட மாட்டன்" என்று.

எந்த நாளும் ஒரே சண்ட இதனால கணவர் அவர் அக்கா வீட்ட போயித்தார். நான் தனிய உழச்சி சாப்பிடுவன் மாதம் 50, 60 கிலோ கொச்சிக்கா ஆய்வன். 800 தொடக்கம் 1500 ரூபா வரை விக்கலாம்.

> "கணவர் கையால ஒரே அடிவாங்குவன். அம்மம்மா சொன்னா "நீயா தேடின வாழ்க்க நீதான் அனுபவி" என்று."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு சுனாமி வந்தது. நாங்க வீட்டில இருக்கல்ல ஓடித்தம். கணவர சுனாமி கொண்டுபோய் தென்ன மரத்தில வைச்சிருந்தது. சுனாமில வீடுவாசல் எல்லாம் அழிஞ்சித்து. அதன் பிறகு வந்து சேருவார் சண்டை பிடிப்பார்.... 'இப்படியே'.

பொலிசுக்குப் போனபோது பொலிஸ் சொன்னது "உங்களுக்கு கஸ்டம்தானே நீங்க சூரியாவுக்குப் போங்க" என்று அட்ரசும் போன் நம்பரும் தந்தாங்க. அவங்க போட் போட்டிருப்பாங்க என்று.



அவங்க சொன்ன மாதிரி சூரியாவிற்கு வந்தன். இங்க வந்த பிறகு தைரியம் வந்தது. என்னைப்போல வாழவேண்டும் என்று முன்வந்த பெண்கள். அவங்களுக்கென்று சக்தி குழு. இந்த குழுவிற்கு வந்த பிறகு ஒரு துணிச்சலே வந்தது. இன்று நாங்க பல பயனுள்ள விடயங்கள பகிர்ந்து கொள்கிறம். செய்யிறம்.

"எப்படி நாம பாதிக்கப்பட்டு இந்த இடத்தில வந்து ஆலோசனை கேட்டு நமது சொந்தக்காலில் நிக்கலாம் முன்னேறலாம் என்று நம்பிக்க வந்ததோ அதுமாதிரி பக்கத்து வீட்டிலயோ நண்பியோ நம்மிடம் வந்தா ஆறுதல் சொல்லலாம். பல சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் இருக்கு. சொல்லக்கூடிய ஆறுதலான வார்த்தைகளும் இருக்கு. அதில இருந்து அவங்க சொந்தக்காலிலயும் நிக்கலாம். தைரியமா கதைக்கலாம். நம்மில் இருந்து அவங்க கற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தா

இது நாங்க வாழ்ந்த வீடு.

சின்ன வயசில என்ன அப்பா பாராளுமன்றம் பார்க்க கொழும்புக்கு கூட்டிப் போனார். வரும்போது எனக்கு இளம்பிள்ள வாதம் வந்தது. கால் வீங்கித்து. பள்ளிக்கு போக பிள்ளைகள் தள்ளி விட்டுத்துகள். பிறகு பள்ளிக்குப் போகல்ல. 3ம் ஆண்டுதான் படிச்சன்.

9 வயசில அப்பா எங்கள விட்டுத்துப் போயித்தார். எனக்கு ஞாபகம் ஒரு யார் சட்டதான் எனக்கென்று அப்பா வாங்கித் தந்தது. அப்பா போனாப் பிறகு குடும்பக் கஸ்டம். நூல் சுத்தப் போனன். அம்மா வளக்குப் போட்டா. அதால அப்பாவ மறியலில போட்டாங்க பிறகு அப்பா செலவு கட்டினார்.

எனக்கு 10 வயசு இருக்கும்போது சூறாவளி அடிச்சது. அம்மாவும் கஸ்டப்பட்டா. நானும் நூல் சுத்தினன். இப்படியே குடும்பம் ஓடியது. 14 வயசில நூல் சுத்துறதோட தறியடிக்கவும் பழகினன். ஒரு சாறன் அடிச்சா 20 ரூபா தருவாங்க.

14 வயசில பெரியாளாகினன். வீட்டில சாப்பாடு இல்ல. அதால பெரியாளாகி 14 நாளயால மீண்டும் வேலைக்குப் போனன். வேலைக்குப் போய் வரும்போது இவர் என்னச் சந்திப்பார். என்னோட கதச்சி கலியாணம் முடிக்கப்போறன் என்றாரு.

நான் சொன்னன் "எங்களுக்கு வீடு வாசல் இல்ல குடில்தான் இருக்கு, வீட்டில சின்னப் பிள்ளைகள் இருக்கு, என்றன். இவரு சொன்னார், "எனக்கு கைகால் இருக்கு உழைப்பன்" என்று. நான் சொன்னன் "நீ அப்படிச் சொல்லித்தான் வருவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு விட்டுத்துப் போயிருவா" என்று. இவர் சொன்னார், "சத்தியமா உண்ட தலயறிய உன்ன கலியாணம் கட்டுவன்" என்று சொல்லி கலியாணம் கட்டினார்.

மூத்த பிள்ள வயித்தில இருக்கக்குள்ள வீடு வளவு தரச்சொல்லி அடிச்சார். இல்லாட்டி விட்டுத்துப் போவன் என்றார். நான் சொன்னன் "முந்திரி வளவுதான் கிடக்கு" என்று. நான் விட்டுத்துப் போவன் என்றார். நான் சொன்னன் "நீங்கதான் உழைப்பில்லாம வந்த மாப்பிள்ள நான் நூல் சுத்தி உழைக்கன்" என்று. அடிக்கடி விட்டுத்துப் போனார்.

ஆக்கள் சொன்னாங்க அவர "சேர்த்தெடு சேர்த்தெடு" என்று. இப்படியே பிள்ளைகள் எல்லாம் பிறந்தாங்க.

இப்படி சண்டையும் சச்சரவுமாய் இருக்கும்போது 1990ம் ஆண்டு முஸ்லிம் தமிழ் பிரச்சன வந்தது. வீட்ட விட்டுத்து ஓடினம். அண்ணா எல்லாம் செத்துப்போயித்தாங்க.

பிறகும் "வீடு வாங்கித்து வா, வீடு வாங்கித்து வா" என்று இவர் சண்டை. "எனக்கு அம்மாவும் இல்ல. அப்பாவும் இல்ல. நீ சொல்லித்தானே வந்த ஒன்றும் தேவல்ல என்று." வீடு வேண்டித்து வா என்று அடிச்சி ஆக்கினப் படுத்துவான்.

எங்களுக்கென்று தனிய வீடு வளவு இல்லாததால 1985ம் ஆண்டு "ஏஜிஏ"(AGA) ஒப்பிசால வளவு குடுக்கக்குள்ள 25 ரூபா கொடுத்து வளவு ஒன்று வாங்கினம். பிறகு 10 ரூபா சீட்டு கட்டி குடில் ஒன்று வைச்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இருந்தாலும் இல்லாட்டியும் அவன்ர பிரச்சனை இருந்து கொண்டே இருந்தது. வறுமையும் சண்டையும் பிரச்சனயும் இதுக்குள்ள பிள்ளைகள் மட்டும் பிறந்து கொண்டிருப்பது எனக்கு சரியான கஸ்டமாய் இருந்தது.
ஆனா குடும்பமா இருக்கப் போகாட்டியும் மல்லுக்கட்டி அடிச்சி இழுத்தெடுப்பான்.
தறிக்குள்ள பூந்து படுத்தாலும் தலையில,
காலுல பிடிச்சி இழுத்தெடுப்பான்.
எனக்கு 2, 3 நாளைக்கு குடும்பமா
இருந்தாலும் புள்ள வந்திரும்.
அதால எனக்குப் பயம்.
நான் உழைக்கனும், வீடு கட்டனும்.
2 பிள்ளைகள் சந்தோசத்தில பிறந்தது.
3 பிள்ளைகள் இப்படிக் கரச்சலில பிறந்தது.

அவங்க வீட்ட போய் "பிள்ள பிறந்தா எனக்கு பாக்க அம்மா அப்பா இல்ல. இவர கூப்பிட்டுச் சொல்லுங்க" என்று சொன்னா வந்து அடிப்பான். ஊசி குளிச பாவிச்சாலும் தொழில் செய்ய ஏலாது. ஒப்பரேசன் பண்ணினா தறி அடிக்க ஏலா.

"குடும்பமா இருக்கப் போகாட்டியும் மல்லுக்கட்டி அடிச்சி இழுத்தெடுப்பான். தறிக்குள்ள பூந்து படுத்தாலும் தலையில, காலுல பிடிச்சி இழுத்தெடுப்பான். எனக்கு 2, 3 நாளைக்கு குடும்பமா இருந்தாலும் புள்ள வந்திரும். அதால எனக்குப் பயம். நான் உழைக்கனும், வீடு கட்டனும். 2 பிள்ளைகள் சந்தோசத்தில பிறந்தது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி இப்படிப் பிரச்சன, சண்டை.
பிறகு பொலிசுக்குப் போனன். இயக்கத்தில கொண்டு முறைப்பாடு கொடுத்தன், 10000 ரூபா காசு கட்டினார். கட்டிற்று வந்து சொன்னார்,
"நான் உழைச்சி நல்லா வைச்சிருப்பன் என்று. நான் சொன்னன்
"நீயும் வேணாம். உண்ட காசும் வேணாம் என்று.



பிறகு சூரியாவிற்கு வந்தன். மரக்கறி வித்து, லாம்பெண்ணை வித்து, சீட்டுக்கட்டி, நாலு லெச்சத்துக்கு வீடு வாங்கியிருக்கன். நான் இப்பவும் நினைச்சி பாப்பன் நாம எவ்வளவு கஸ்டப்பட்டிருக்கம். சோட்டி இல்லாம, சாறி இல்லாம.. இப்படி'.

எனக்கு இப்ப வயசு 49. நான் அம்மா அப்பாவோட இருந்த மாதிரி சந்தோசமா இருக்கன். இடையிலதான் கொஞ்ச காலம் கஸ்டப்பட்டுத்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சசிகலா

நான் 9ம் ஆண்டு வரைக்கும்தான் பள்ளியில படிச்சன் இயக்கப்பிரச்சனையால பிறகு பள்ளிய விட்டு விலகித்தன். பிறகு வேற வீட்டிற்கு போயித்தன். எனக்கு அப்ப 13 வயசு.

2002ம் ஆண்டு 5ம் மாசம் பெரிய புள்ளயாகினன். அன்றைக்கு முழு நாளும் அம்மாவங்க என்னோட நின்றவங்க. எனக்கு சரியான சந்தோசம்.

பிறகு 16 வயசில கலியாணம் கட்டினன். எனக்கு அதில விருப்பம் இல்லாட்டியும் அம்மாட சந்தோசத்திற்காக கட்டினன். அதனால எனக்கு அது சந்தோசமாகவும் துக்கமாகவும் இருந்தது. 2004ம் ஆண்டு தம்பி பிறந்தவர். 2006ம் ஆண்டு 2 வயசில ஏடு தொடக்கினன்.

பிறகு எங்களுக்குள்ள சண்டை தொடங்கித்து. தம்பி வயித்தில. முதலாம் மாதம் முதலாம் திகதி தைப்பொங்கலுக்கு எங்களுக்கு உடுப்பெடுக்க அம்மா காசி தந்தா. காத்தான்குடிக்கு உடுப்பெடுக்க கூட்டி வந்தார். அவருக்கெண்டா உடுப்பெடுக்க ஏலுமாம். எனக்கெடுப்பதென்றா கொழும்புக்குத்தான் போகனுமாம் என்று சொல்லி சண்டபிடிச்சி என்ன விழுத்தாட்டி பிறகு இறக்கி விட்டுத்து போயித்தார். நடந்துதான் வீட்ட போனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2005ம் ஆண்டு 2ம் மாசம் 4ம் திகதி பிரிவு ஏற்பட்டது. பிறகு 2006ம் ஆண்டு 5ம் மாதம் 9ம் திகதி சேர்த்து வைச்சாங்க. பிரியிறதும் சேர்வதுமாக இருந்தம். 2007ம் ஆண்டு அகதியா முனைக்காடு, தாளங்குடா ஆகிய இடங்களுக்கு சென்றேன்.

2011ம் ஆண்டு 6ம் மாதம் 6ம் திகதி. அடுத்த மகன் பிறந்தான். பிறக்கிறதுக்கு முதல் நாள் அவரின் அம்மா நின்றாவு. அன்றிரவு நான்தான் சமச்சி கொடுத்தன். 6ம் திகதி அவர்ர அம்மா போயித்தார். நான்தான் துறையடிக்குப்போய் மீன் வாங்கி கொச்சிக்காய் கூட்டு அரச்சி சமச்சன். அவருக்கு சொதி வைச்சன். பிறகு உடம்பு சரியில்ல. தாழங்குடாவில இருந்த அம்மாக்கு "போன்" பண்ணி சொல்லிப்போட்டு ரோட்டால போற ஆட்டோவ கூப்பிட்டன். எங்கட வீட்ட வாற வழியில கிறவல் கொட்டிக்கிடந்ததால ஆட்டோ வரல்ல. சாமான் எல்லாத்தையும் எடுத்துத்து ஆட்டோக்கு போனன். பிறகு ஆஸ்பத்திரிக்குப்போக பிள்ள பிறந்தான்.

**"இன்னொன்றும் எனக்கு சரியான ஞாபகம் 2010ம் ஆண்டு 10ம் மாதம் முதலாம் திகதி. அன்றைய நாள் சரியான சந்தோசமான நாள். சிறுவர் தினத்தில வைத்த சித்திரப்போட்டியில மகன் முதலாவதாக வந்தவர்."**

என்ன இருந்தும் குடும்பத்தில பிரச்சன முடியல்ல. பொலிஸ் என்றும் கோட்ஸ் என்றும் வாழ்க்க போனது. 2011ம் ஆண்டு 12ம் மாசம் 29ம் திகதியில இருந்து ஒத்தடியாய் வீட்ட விட்டுப் போனவர். பிறகு எனக்கு தனிமையாய் இருந்தது.
2012ம் ஆண்டு நண்பி மூலம் சூரியா பற்றி தெரிய வந்தது. அவள் மூலமாகவே வந்தன். அது சந்தோசமாகவும் கஸ்டமாகவும் இருந்தது. நமக்கு மட்டும்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நிலமை என்று நினைச்சன். இங்க ஆறுதலான சூழல் இருந்தது.

வழக்குப்போட்டதில 2012ம் ஆண்டு 3ம் மாதம் 13ம் திகதி தீர்ப்பு வழங்கினாங்க. காசு கட்டனும் என்று. 5ம் மாசம் 14000 ரூபாய் கட்டினார். அதில இருந்து தாவரிப்பு கட்டத் தொடங்கினவர்தான்.

2014ம் ஆண்டு 6ம் மாதம் 20ம் திகதி இந்தியன் வீட்டுத் திட்டத்தில எனக்கு வீடு கிடச்ச நாள்.

அது மாதிரி இன்னொன்றும் எனக்கு சரியான ஞாபகம். 2010ம் ஆண்டு 10ம் மாதம் முதலாம் திகதி. அன்றைய நாள் சரியான சந்தோசமான நாள். சிறுவர் தினத்தில வைத்த சித்திரப்போட்டியில மகன் முதலாவதாக வந்தவர்.

இப்ப நான் சொல்ற பிள்ளைகளுக்கு "தம்பி நீயாச்சும் நல்லாப் படி" என்றுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்க வீட்டில நான் அப்பா அம்மா சகோதரர்கள் என்று நல்ல சந்தோசமா நாங்க இருந்த காலம் அது. அக்கா எல்லாம் கலியாணம் கட்டியும் நாங்க பிரியல்ல ஒன்றாகத்தான் இருந்தம்.


அப்ப எனக்கு 16 வயசு. பயங்கர யுத்த நேரம். எங்களுக்கு பொடியன் என்று அண்ணன் ஒராள்தான். 1986ம் ஆண்டு. அண்ணனுக்கு அப்ப 19 வயசு. அந்த யுத்தம் அண்ணனைப் பழிவாங்கனது எங்களால இன்னம் தாங்க முடியல்ல. அண்ணன் சாகக்குள்ள அவருக்கு வயசு 19தான். இராணுவம்தான் கொண்டது. அண்ணாவ மட்டுமில்ல 32 பொடியனுகள புடிச்சிப்போனது. 19, 20 வயதுப் பொடியனுகள். இருதயபுரம் சேர்ச்சக்குக் கிட்ட எங்க வீடு. அங்கால கள்ளியங்காடு. "கேம்"பிற்கு கொண்டு போறம் எண்டு பிடிச்சிச்சு போனவங்க. எல்லாரையும் சுட்டவங்க. வீட்டுக்குக் கிட்டதான் சுட்டவங்க. சேர்ச்சுக்குள்ள 3 பேர் செத்த எண்டு கேள்விப் பட்டீங்களா? 1986ம் ஆண்டு இருதயபுரம் சுடுகாடாத்தான் இருந்தது. எல்லார் வீட்டிலயும் சவம்தான்.

நான் ஓயெல்தான் (O/L) கடசியா படிச்சன். அண்ணா செத்திற்றார். அதை நினைத்து எனக்கு வருத்தமும் வந்துத்து. அதுக்குமேல என்னால படிக்க முடியல்ல. படிக்கவும் இல்ல. அப்பாக்கும் சரியான கவலை. நான் வளந்த பிறகு அப்பாவும் செத்துத்தார்..

பிறகுநான் கல்யாணம் கட்டக்குள்ள 29 வயசு. கலியாணம் கட்டும் மட்டும் நான் தனிய ஒரு இடமும் போற இல்ல. எல்லாம் அம்மாவோடதான் போற. அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செத்தா பிறகு ஆகயும் கவல எனக்கு. இப்ப அம்மாவும் இல்ல நான் நினைச்ச வாழ்க்கையும் இல்ல'

அன்றைக்கு நான் இருந்த நிலயில இருக்கிற பிள்ளைகளுக்கு இப்ப நான் உதவி செய்யிறன். எனக்கு தெரிஞ்ச பிள்ள ஒன்று. படிக்க ஏலும் ஆனா வசதி இல்ல. அந்தப் பிள்ளய எப்படியோ படிப்பிக்கனும். அதுதான் எனக்கு ஆசை.

"நான் கல்யாணம் கட்டக்குள்ள 29 வயசு. கலியாணம் கட்டும் மட்டும் நான் தனிய ஒரு இடமும் போற இல்ல. எல்லாம் அம்மாவோடதான் போற. அம்மா செத்தா பிறகு ஆகயும் கவல எனக்கு. இப்ப அம்மாவும் இல்ல நான் நினைச்ச வாழ்க்கையும் இல்ல."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு இப்பவும் சரியான ஞாபகம் ஹெலி வந்து செல் போடுறது. எங்க முருங்க மரத்தில செல் விழுந்து பக்கத்தில இருந்த மாடுகள் எல்லாம் ஓடினது. எங்கட உம்மா எங்கள மேசைக்கு கீழ வைச்சி தாச்சி சட்டியால "செல்" படாம மூடுவா.

இப்படியிருக்கும்போது இனக்கலவரம் தமிழ் முஸ்லிம் ஆக்களிடையே வந்தது. எங்களுக்கு பழக்கமான தமிழ் ஆக்கள். அவங்களுக்கு பழக்கமான முஸ்லிம் ஆக்கள் என்று வாழ்ந்திருந்தம். இப்ப சண்டை வந்துத்து. தமிழ் ஆக்களுக்கு எங்கட உடுப்பப் போட்டு காப்பாத்தி வைச்சிருக்கம். அதுமாதிரி ஆஸ்பத்திரியில இருந்த எங்கட ஆக்கள பொட்டு வைச்சி தமிழ் ஆக்கள் காப்பாத்தி இருக்காங்க. எங்கட சாச்சியும் அப்படி காப்பாத்தபட்டிருக்கா. ரெத்தமும் குடுத்திருக்காங்க.

தமிழ் ஆக்களின்ர பொருளை எல்லாம் மண்ணைத்தோண்டி புதைச்சி வைச்சி காப்பாத்துவம். எங்கட வாப்பா அவர்ர காரையும் புதைச்சி வைச்சவர்தான்.

எனக்கு ஞாபகம் என்ர சின்ன வயசில இந்தியன் ஆமி ரொட்டியும் தேங்காத் துண்டும் தந்தது சாப்பிட. இப்படி யுத்தம் ஒரு பக்கம், இனப்பிரச்சன ஒரு பக்கம். அதுக்குள்ள படிச்சன் வளந்தன். இனி ஓயெல்(O/L) எடுக்கனும் ஆனா பிறப்புச் சான்றிதழ் இல்ல. நான் பிறப்புச் சான்றிதழ் எடுக்க சரியா கஸ்டப்பட்டுத்தன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பிறந்தது 1984. எனக்கு வீட்டாக்கள் வைச்ச பேர் றிஷானி. அவங்க அந்த போம (form) அனுப்பாம விட்டுத்தாங்க. அதனால நான் இறந்த ஒரு பெண்ணுடைய சான்றிதழ அழிச்சித்தான் எனக்கான பதிவு எடுத்தன். அதில நான் பிறந்த திகதி 1983 என்றும் பெயர் கதிஜா என்றும் இருக்கு.

2006ம் ஆண்டு இவர சந்திச்சன். அது மட்டும் தனிமையான உணர்வு.



"எங்களுக்கு பழக்கமான தமிழ் ஆக்கள். அவங்களுக்கு பழக்கமான முஸ்லிம் ஆக்கள் என்று வாழ்ந்திருந்தம். இப்ப சண்டை வந்துத்து. தமிழ் ஆக்களுக்கு எங்கட உடுப்பப் போட்டு காப்பாத்தி வைச்சிருக்கம். அதுமாதிரி ஆஸ்பத்திரியில இருந்த எங்கட ஆக்கள பொட்டு வச்சி தமிழ் ஆக்கள் காப்பாத்தி இருக்காங்க. எங்கட சாச்சியும் அப்படி காப்பாத்தபட்டிருக்கா. ரெத்தமும் குடுத்திருக்காங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பதிப்பாசிரியர் | சரளா இமானுவேல், எஸ். விஜயலெட்சுமி |
| புகைப்படங்கள் | ஆவணக்காப்பகம்,<br>சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் |
| வடிவமைப்பு | வேலாயுதன் ஜெயசித்ரா |
| அச்சகம் | க்லோப் பிரின்டிங் வர்க்ச் |
| அனுசரணை | FOKUS<br>FORUM FOR WOMEN AND DEVELOPMENT |

25
சூரியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Globe Printing Works - No. 5, Stork Place, Colombo 10. Tel: 0777-315971

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org